**செ.வெ.எண்: 249** **நாள்: 13.05.2024**

**புதுக்கோட்டை மாவட்டம்**

**புதுக்கோட்டை மற்றும் விராலிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்திட இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை மற்றும் விராலிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்திட **www.skilltraining.tn.gov.in** இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் மேற்காணும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் சென்றும் விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கலாம்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் 2024 முதல் தொடங்கும் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற 8-ம் வகுப்பு தேர்ச்சி, 10-ம் வகுப்பு தேர்ச்சி. 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பெண்களுக்கு வயது வரம்பு கிடையாது. தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலைய விவரங்கள், தொழிற் பிரிவுகள், இவற்றிற்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீடு ஆகியவை இணையதளத்தில் உள்ள விளக்க கையேட்டில் (Prospectus) தரப்பட்டுள்ளன.

மாணவர்கள், இணையதளத்தில் கொடுத்துள்ள அறிவுரைகளை கவனமாக படித்து புரிந்து கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இணையவழியாக சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணம் ரூ.50/- ஐ கிரடிட் கார்டு, டெபிட் கார்டு, நெட் பேங்க், ஜீ-பே வாயிலாக செலுத்தலாம். மேலும் பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி, சீருடை, காலணி, பாடப்புத்தகம், பஸ் பாஸ், வரைபடக் கருவிகள் மற்றும் மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.750/- வழங்கப்படும். அரசு பள்ளியில் பயின்ற பெண் மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படும். ஆண் மற்றும் பெண் பயிற்சியாளர்களுக்கு உணவுடன் கூடிய தங்கும் இலவச விடுதி வசதி உண்டு. தமிழ்நாடு அரசு டாடா டெக்னாலஜி நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் இலவச குறுகிய கால பயிற்சியும் வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி முடித்த பின் வளாக நேர்காணல் மூலம் 100 சதவீதம் வேலை பெற்று தரப்படும். தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்.

இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய கடைசி நாள் 07.06.2024 ஆகும். மேலும், விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி, அரசு தொழிற்பயிற்சி நிலையம் புதுக்கோட்டை - 04322-221584, 9499055733, அரசு தொழிற்பயிற்சி நிலையம், விராலிமலை - 8667426792, உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், புதுக்கோட்டை - 04322-299382 ஆகும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai